<u>நாள் 05.08.2026</u>

**<u>அசல் வழக்கு எண். 685/2021</u>**

**<u>பி.வா.சா.1. அன்னமயில், க/பெ.மணி</u>**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

தாவா வீட்டை எனக்கு பாஸ்கரன் என்பவர் விற்பனை செய்துள்ளார் என்றாலும், அவருக்கு சங்கத்தின் ஹிட்கோ கடன் மூலமாக வந்த வீடு என்றால் சரிதான். ஒருவருக்கு கிரையம் செய்யவேண்டும் என்றால் கடனை முழுமையாக செலுத்திவிட்டு தான் விற்பனை செய்யவேண்டும் என்றால் சரிதான். பாஸ்கரின் கடனை விஜயா தான் செலுத்தினார் என்றால் சரியல்ல. விஜயா கொஞ்சம் கட்டினார். நான் கொஞ்சம் கட்டினேன். 2005 ஆம் ஆண்டில் சங்கத்தின் மூலமாக எனக்கு பத்திரம் பதிந்து கொடுத்தார்கள் என்றால் ஆமாம். அந்த பத்திரத்தில் பாஸ்கரன் என்பவர் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் போட்டுள்ளார்.

பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பு சங்கத்தின் மூலமாக பாஸ்கரனுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு பாஸ்கரன் ஆட்சேபனையின்மை மற்றும் உறுதிமொழி பத்திரம் நோட்டரி வழக்கறிஞரிடம் வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பிறகு தான் பத்திரம் எனக்கு சங்கத்தின் மூலமாக பதிவு செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். SO பதிவு செய்து கொடுத்தார். பாஸ்கரனிடம் ஒப்புதல் கடிதம் சங்கத்தில் வாங்கி கொண்டு தான் எனக்கு கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதனால் சங்கத்தின் மூலம் சரியாக சட்டத்தின் படி எனக்கு பதிவு செய்துகொடுத்துள்ளார்கள் என்றால் ஆமாம்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. பாஸ்கரன் என் மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பாஸ்கரன் தாக்கல் செய்த வழக்கிற்கு நான் தாக்கல் செய்துள்ள பதிலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியுமா என்றால் சட்டப்படி SO எனக்கு எழுதிக்கொடுத்தார் என்று சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள

எதிர்வழக்குரையில் யார் சொல்லி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் எனது கணவர் மற்றும் நான் இருவரும் வழக்கறிஞரிடம் சொல்லி தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்தோம். அப்போது எனது மகன், மருமகள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

சிபிசி கட்டளை 2 விதி 2 என்ன என்பது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வழக்கறிஞருக்கு தான் தெரியும். இந்த வழக்கில் அவசியமான தரப்பினரை சேர்க்கவில்லை என்று சொல்லியுள்ளதில் யார் அவசியமான தரப்பினர் என எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கறிஞருக்கு தான் தெரியும். வாதி பாஸ்கரன் தாக்கல் செய்துள்ள வழக்கின் சர்வே எண், விஸ்தீரணம், நான்குமால் தெரியுமா என்றால் தெரியும். சர்வே எண்.3336. விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1556 சதுரடி ஆகும். நீளம் அகலம் தெரியாது. நான்குமால் விபரம் என்ன என்றால் தெற்கு பக்கம் நாங்கள் உள்ளோம். வடக்கு பக்கம் 3ஆம் நபர் இருக்கிறார்கள். மேற்கு பக்கம் காலி இடம். கிழக்கு பக்கம் காலி இடம்.

தாவா சொத்து ஆதியில் அப்போதைய கலைமகள் சபாவின் செயலாளர் தனராசனுக்கு 14.06.1988 ஆம் தேதி சின்னாளபட்டி சார்பதிவக ஆவண எண்.1161 மூலம் பாத்தியப்பட்டது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சொத்தை பொறுத்து 08.02.1982 சின்னாளபட்டி சார்பதிவக ஆவண எண்.111 மூலம் சந்திரன் மனைவி சரஸ்வதிக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. கலைமகள் நூல் மற்றும் செயற்கை பட்டு உற்பத்தி சங்கத்தின் சார்பாக அந்த 56 உறுப்பினர்களின் நிதியிலிருந்து சொத்தை சரஸ்வதியிடமிருந்து சங்கத்திற்கு கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். வாதி பாஸ்கரன் சங்கத்தில் வரிசை எண்.6–ல் உறுப்பினர் எண்.248 என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து மற்றும் மற்ற சொத்துக்கள் ம.வ/ந.ஊ.இ.எண்.1065/90–ன்படி சொத்தை 56 பிளாட்டாக பிரித்தார்களா என்றால் ஆமாம். அதில் வாதிக்கு பிளாட் எண்.20 ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பிளாட் எண்.20–ல் மொத்த 1551 சதுரடியில் 334 சதுரடியில் பாஸ்கரன் வீடு கட்டி மீதி காலி இடத்தை அவர் அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். 2002 ஆம் ஆண்டு வரையிலும் வாதி பாஸ்கரன் மேற்படி தாவா வீட்டில் தான் குடியிருந்தார் என்றால் சரிதான்.

2002–ல் பாஸ்கரன் மகளுக்கு தீ விபத்து ஏற்பட்டது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதனால் வீடு சரியில்லை என்று சொல்லி பாஸ்கரன் அவரது குடும்பத்தினருடன் ராயல் சினிமா ரோடு, சின்னாளபட்டி K.M.S தெரு, கீழக்கோட்டை, கோவிந்தசாமி குறுக்கு தெரு, மேட்டுப்பட்டி, காந்திஜி ரோடு, காந்திகிராமம், போக்குவரத்து நகர், ஆலமரத்துபட்டி மேற்படி ஊரில் வாடகைக்கு குடியிருந்தாரா என்றால் எங்கள் காலனியை சுற்றியே வாடகைக்கு இருந்தார்கள். வாதி பாஸ்கரன் கேரளாவில் வேலை பார்த்து வருகிறார் என்றால் சரியல்ல. இங்கு தான் உள்ளார். பாஸ்கரன் மகள் வனிதா 19.05.2021 ல் வில்லங்கம் போட்டு பார்த்தபோது தான் சொத்து எனது பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வந்தது என்று சொன்னால் சரியல்ல. அது தவறு. மேற்படி விபரம் தெரிந்த பிறகு பாஸ்கரன் மற்றும் அவரது குடும்பத்தாருடம் முதலமைச்சர் தனிப்பிரிவு, உதவி இயக்குநர் கைத்தறி ஆகிய அலுவலர்களுக்கு புகார் கொடுத்தார்கள் என்றால் கொடுத்தார்கள். சங்கத்திலிருந்து எழுதிக்கொடுத்தால் செலுபடியாகது என்று சொல்லிவிட்டார்கள். அதனால் வாதி எனக்கு வழக்கறிஞர் மூலமாக 29.09.2021 ஆம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம்.

தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் 09.06.2004–ல் விஜயா, பழனிச்சாமி என்பவருக்கு வீடு ஒத்தி ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வாதி பாஸ்கரன் விஜயாவிற்கு கிரையம் பத்திரம் ஏதும் எழுதிக்கொடுத்துள்ளாரா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார். அந்த விஜயாவிடம் உள்ள கிரையப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. முதல் குறுக்கு விசாரணை சொல்லியுள்ள பாஸ்கரன் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் ஆட்பேசனையில்லா சான்று மற்றும் உறுதி மொழி பத்திரம் ஆகியவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சங்கத்தில் உள்ளது. மேற்படி சங்கத்தில் உள்ள ஆவணங்களை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முயற்சி செய்துள்ளேனா என்றால் முயற்சி செய்யவில்லை. அந்த ஆவணத்தை நான் பார்த்தது இல்லை.

நான் சொல்லியுள்ள விஜயா வா.சா.2 ஆக இந்த வழக்கில் விசாரிக்கப்பட்டுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விஜயா கலைமகள் துணி நூல் பட்டு உற்பத்தி சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி சங்கத்தின் மூலம் 56 பிளாட் போட்டத்தில் சங்கத்தில் உள்ள உறுப்பினர்களுக்கு தான் பிளாட் விற்பனை செய்ய முடியும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2வது பக்கத்தில் கலைமகள் காலனி வீட்டு எண்.2/263 ல் குடியிருக்கும் ஏ.மணி மனைவி எம்.அன்னமயில் என்பவருக்கு ரூ.96,000/–த்திற்கு பேசி முடிவு செய்யப்பட்டுள்ளது, அதில் முன் பணம் ரூ.35,000/– என்றும், பாக்கி ரூ.61,000/–த்தை வீடு பதிவு செய்து கொடுக்கும்போது பெற்றுக்கொள்வது என்று விஜயா தான் கையெழுத்து செய்து சொல்லியுள்ளார் என்றால் ஆமாம். அதேபோல, பாக்கி ரூ.61,000/–த்தை விஜயாவும், அவரது மகன் வைரபாண்டி இருவரும் பெற்றுக்கொண்டதாக தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது என்றால் ஆமாம்.

எனது நிரூபண வாக்குமூலத்தில் 5வது பக்கம் 7வது பாராவில் ரூ.21,000/– கடனாக செலுத்தி வைத்தேன் என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல, நிரூபண வாக்குமூலத்தில் 7வது பக்கத்தில் 11வது பாராவில் எனது சுவாதீனத்தில் உள்ள சொத்தை வாதி சுவாதீனம் கோர உரிமை இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு கிரையம் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் சங்கம் தற்போது இல்லை என்றால் கலைக்கப்பட்டது. 2015 ல் ரூ.2 இலட்சம் செலவு செய்து ஆழ்துளை கிணறு அமைத்து கழிப்பறை கட்டியுள்ளேன் என்று சொல்லியுள்ளதிற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

இந்த வழக்கு காலவரையறை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளதில் எந்த காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். சொத்துக்கள் மார்கெட் மதிப்பு சதுரடி ரூ.600/– போகும் என்று சொல்லியுள்ளதில் அதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு சங்கத்தின் மூலமாக ஏற்கனவே வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி பாஸ்கரன் விஜயாவிற்கு கிரையப்பத்திரம் ஏதும் எழுதி பதிவு செய்து கொடுக்கவில்லை என்றால் பதிந்து கொடுக்கவில்லை. வெள்ளை பேப்பரில்

எழுதிக்கொடுத்துள்ளார். அந்த வெள்ளை பேப்பரில் எழுதிக்கொடுத்ததை பயன்படுத்தி தான் நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் ஆமாம். சங்கத்தின் மூலமாக வாங்கியுள்ளேன்.

தாவா சொத்தை விற்பதற்கு விஜயாவிற்கு எந்தவிதமான சட்டப்படியான உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் நான் உரிமையில்லாத நபரிடம் கிரையம் பெற்றதாக சொல்வது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. அதனால் வாதி பாஸ்கரனுக்கு சொத்தை ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. 2005–ல் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளதில் பி.வா.சா.ஆ.8 ஆவணமானது 2016 ஆம் ஆண்டு இரசீது என்றால் சரிதான். 2016 தான் குழாய் போட்டோம். பி.வா.சா.ஆ.10 ஆவணமானது ஏப்ரல் 2026 மாதத்திற்கான இரசீது தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். விஜயாவிற்கு பாஸ்கரன் வீடு உள்ள 334 சதுரடி மட்டும் தான் கொடுத்தார் என்றால் முதலில் கொடுத்தார். இரண்டாவதாக காலி இடம் பத்திரம் கொடுத்துள்ளார். மேற்படி இரண்டு பத்திரமும் என்னிடம் தான் உள்ளது என்றால் இருக்கிறது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் நான் பாஸ்கரனின் சொத்தை மோசடியாக அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பாஸ்கரனுக்கு பாத்தியப்பட்ட சொத்தை உரிமையில்லாத நபரிடம் மோசடியாக கிரையம் பெற்று நான் பிரச்சனை செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் பிராதுப்படி தீர்ப்பாக வாதிக்கு முழு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

Typed to my dictation in Open Court read over to me and Acknowledged by him / her to be correct.

THIYAGARAJAN GOKULAKRISHNAN

Digitally signed by THIYAGARAJAN GOKULAKRISHNAN
Date: 2026.08.05 19:18:48 +0545

Principal Sub Judge,
Dindigul.